ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477669 +94 11 2346304
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| வெளியிடுபவர் | பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் |
|---|---|
| திகதி | 2023 ஒத்தோபர் 31 |

# வெளிநாட்டுத்துறைச் செயலாற்றம் - 2023 செத்தெம்பர்

## முக்கிய பண்புகள்

- வணிகப்பொருள் வர்த்தகப் பற்றாக்குறையானது 2022 செத்தெம்பருடன் ஒப்பிடுகையில் 2023 செத்தெம்பரில் ஒப்பீட்டளவில் தாழ்ந்தளவிலான ஏற்றுமதி வருவாய்கள் மற்றும் உயர்ந்தளவிலான இறக்குமதிச் செலவினம் என்பவற்றின் இணைந்த தாக்கத்தின் காரணமாக விரிவடைந்தது. 2023 சனவரி தொடக்கம் செத்தெம்பர் வரையான காலப்பகுதியில் ஒன்றுசேர்ந்த வர்த்தகப் பற்றாக்குறையானது குறிப்பிடத்தக்களவு தாழ்ந்தளவில் தொடர்ந்தும் காணப்பட்டது.
- தொழிலாளர் பணவனுப்பல்கள் மற்றும் சுற்றுலாத்துறையிலிருந்தான வருவாய்கள் என்பன முன்னைய ஆண்டின் தொடர்புடைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2023 செத்தெம்பரில் குறிப்பிடத்தக்களவு மேம்பாடுகளைப் பதிவுசெய்தன.
- சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 2023 செத்தெம்பரில் முடிவடைகின்ற ஒன்பது மாத காலப்பகுதியில் ஒரு மில்லியனை விஞ்சிப் பதிவுசெய்யப்பட்டன.
- அரச பிணையங்கள் சந்தையில் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு முதலீடுகள் முன்னைய மாதங்களுடன் ஒப்பிடுகையில் 2023 செத்தெம்பர் மாத காலப்பகுதியில் தாழ்ந்தளவிலான தேறிய வெளிப்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்தன.
- மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2023 செத்தெம்பர் இறுதியளவில் ஐ.அ.டொலர் 3.5 பில்லியன் தொகையாக விளங்கின.
- இலங்கை ரூபாவானது 2023 செத்தெம்பர் மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலரிற்கெதிராக ஓரளவு தளம்பல்தன்மைகளைக் காண்பித்தது.

### வணிகப்பொருள் வர்த்தகச் செயலாற்றம்

#### ஏற்றுமதிகள்







| வர்த்தக மீதி (ஐ.அ.டொ.பில்) | செத் | சன-செத் |
|---|---|---|
| 2022 | 0.20 | 4.1 |
| 2023 | 0.38 | 3.3 |

#### இறக்குமதிகள்




### சுற்றுலாத்துறையிலிருந்தான வருவாய்கள்




### தொழிலாளர் பணவனுப்பல்கள்




### மொத்த அலுவல்சார் ஒதுக்குகள்*




* சீன மக்கள் வங்கியிடமிருந்தான பரஸ்பர பரிமாற்றல் வசதியினை உள்ளடக்கியுள்ளது

### கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் தேறிய உட்பாய்ச்சல்கள் (முதலாந்தர மற்றும் இரண்டாந்தரச் சந்தைகள் - தேறிய)




### அரச பிணையங்கள் சந்தையிற்கான மொத்த உட்பாய்ச்சல்கள்




### வெளிநாட்டுச் செலாவணி வீத அசைவுகள் (ஐ.அ.டொ/ரூ)



## வணிகப்பொருள் வர்த்தக மீதி

வணிகப்பொருள் வர்த்தகக் கணக்குப் பற்றாக்குறையானது 2022 செத்தெம்பரில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 205 மில்லியன் பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் 2023 செத்தெம்பரில் ஐ.அ.டொலர் 378 மில்லியனிற்கு விரிவடைந்தது. அதேவேளை, 2023 சனவரி தொடக்கம் செத்தெம்பர் வரையான காலப்பகுதியில் வர்த்தகக் கணக்கின் ஒன்றுசேர்ந்த பற்றாக்குறையானது 2022இன் அதே காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 4,093 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 3,342 மில்லியனிற்குச் சுருக்கமடைந்தது. வர்த்தக மீதியில் இம்மாற்றத்திற்குப் பங்களித்த முக்கிய காரணிகள் வரைபடம் 1இல் காட்டப்பட்டுள்ளன.

**வரைபடம் 1: 2023 சனவரி-செத்தெம்பர் வரையிலான காலப்பகுதியில் வர்த்தகப் பற்றாக்குறையின் ஆண்டிற்காண்டு மாற்றத்திற்கு பங்களித்த முக்கிய காரணிகள் (ஐ.அ.டொ. மில்)**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 2: மாதாந்த வர்த்தகப் பற்றாக்குறை**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

## வணிகப்பொருள் ஏற்றுமதிகளின் செயலாற்றம்[1]

**ஒட்டுமொத்த ஏற்றுமதிகள்: வணிகப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2022 செத்தெம்பரிலும் பார்க்க 2023இன் தொடர்புடைய காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 972 மில்லியனிற்கு 10 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்ததுடன் 2023 ஓகத்தில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 1,119 மில்லியனுடன் ஒப்பிடுகையிலும் குறைவடைந்து காணப்பட்டன.** வேளாண்மை ஏற்றுமதிகளில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு மத்தியில், மெதுவடைகின்ற வெளிநாட்டுக் கேள்வியுடன் ஆடைகள் உள்ளடங்கலாக கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களில் ஏற்பட்ட வீழ்ச்சியானது ஓராண்டிற்கு முன்னைய நிலையுடன் ஒப்பிடுகையில் 2023 செத்தெம்பரில் ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட இச்சுருக்கத்திற்கு முக்கியமாகப் பங்களித்தன. 2023 சனவரி தொடக்கம் செத்தெம்பர் வரையான காலப்பகுதியில் ஒன்றுசேர்ந்த ஏற்றுமதி வருவாய்களும் கடந்த ஆண்டின் அதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 8,982 மில்லியனிற்கு 10.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன.

**கைத்தொழில் ஏற்றுமதிகள்:** ஆடை ஏற்றுமதியின் குறிப்பிடத்தக்களவிலான வீழ்ச்சியினால் பங்களிக்கப்பட்டு, கைத்தொழில் பொருட்களின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2023 செத்தெம்பரில் வீழ்ச்சியடைந்தன. இதற்கமைய, அநேகமான முக்கிய சந்தைகளுக்கான (ஐக்கிய அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஐக்கிய இராச்சியம்) ஆடை ஏற்றுமதிகள் வீழ்ச்சிகளைப் பதிவுசெய்தன. மேலும், ஏனையவற்றிற்கிடையில், இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள், பொறி மற்றும் பொறியியல் சாதனங்கள் (முக்கியமாக, இலத்திரனியல் சாதனம்) மற்றும் இரசாயனப் பொருட்கள் (முக்கியமாக, செயற்படு காபன்) என்பவற்றின்

[1] இலங்கை மத்திய வங்கியின் ஏற்றுமதிகளின் வகைப்படுத்தல் மற்றும் நியம பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் திருத்தம் 4இன் அடிப்படையிலமைந்த ஏற்றுமதிகளின் வகைப்படுத்தல் என்பன முறையே இணைப்பு II மற்றும் இணைப்பு III இல் காட்டப்பட்டுள்ளன.

ஏற்றுமதிகளில் வீழ்ச்சிகள் பதிவுசெய்யப்பட்டன. இருப்பினும், நீர்க்கலம் மற்றும் வானூர்தி எரிபொருள் ஏற்றுமதிகளின் அளவுகளில் ஏற்பட்ட அதிகரிப்பின் காரணமாக பெற்றோலிய உற்பத்திகளிலிருந்தான வருவாய்கள் 2023 செத்தெம்பரில் அதிகரித்துக் காணப்பட்டன.

**வேளாண்மை ஏற்றுமதிகள்:** கடலுணவு (முதன்மையாக, புதிய மீன்), தெங்குடன் தொடர்புடைய உற்பத்திகள் மற்றும் தேயிலை என்பவற்றிலிருந்தான வருவாய்களில் ஏற்பட்ட அதிகரிப்பின் முக்கிய காரணமாக வேளாண்மைப் பொருட்களின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஓராண்டிற்கு முன்னைய நிலையுடன் ஒப்பிடுகையில் 2023 செத்தெம்பரில் மேம்பட்டுக் காணப்பட்டன. உயர்ந்தளவிலான ஏற்றுமதி அளவுகளின் விளைவாக தேயிலையிலிருந்தான வருவாய்களில் அதிகரிப்பொன்று காணப்பட்டபோதிலும் தேயிலை ஏற்றுமதிகளின் அலகு விலையான ஓராண்டிற்கு முன்னைய நிலையிலும் பார்க்க 2023 செத்தெம்பரில் தாழ்ந்தளவில் காணப்பட்டது. அதேவேளை, வாசனைத்திரவியங்கள் (முக்கியமாக, கறுவா), இயற்கை இறப்பர் மற்றும் பதப்படுத்தப்படாத புகையிலை என்பவற்றிலிருந்தான ஏற்றுமதி வருவாய்களில் வீழ்ச்சியொன்று காணப்பட்டது.

**கனிப்பொருள் ஏற்றுமதிகள்:** தைட்டானிய தாதின் ஏற்றுமதியிலிருந்தான வருவாய்களில் ஏற்பட்ட வீழ்ச்சியின் முக்கிய காரணமாக கனிப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2022 செத்தெம்பருடன் ஒப்பிடுகையில் 2023 செத்தெம்பரில் வீழ்ச்சியடைந்தன.

**வரைபடம் 3: மாதாந்த ஏற்றுமதிச் செயலாற்றம்**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 4: ஏற்றுமதிகளின் உள்ளடக்கம்**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

## வணிகப்பொருள் இறக்குமதிகளின் செயலாற்றம்[2]

**ஒட்டுமொத்த இறக்குமதிகள்: வணிகப்பொருள் இறக்குமதிகள் மீதான செலவினம் 2022 செத்தெம்பரில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 1,284 மில்லியன் கொண்ட குறிப்பிடத்தக்களவிலானதொரு தாழ்ந்த தளத்துடன் ஒப்பிடுகையில் 2023 செத்தெம்பரில் ஐ.அ.டொலர் 1,349 மில்லியனிற்கு 5.1 சதவீதத்தினால் (ஆண்டிற்கு ஆண்டு) அதிகரித்தபோதிலும் அது 2023 ஓகத்தில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 1,426 மில்லியனிலிருந்து வீழ்ச்சியடைந்தது.** இறக்குமதிச் செலவினத்தில் ஏற்பட்ட அதிகரிப்பானது பரந்த அடிப்படையிலானதொன்றாகக் காணப்பட்டதுடன் முதலீட்டுப் பொருட்களினால் முக்கியமாகப் பங்களிக்கப்பட்டிருந்தது. அதேவேளை, 2023 சனவரி தொடக்கம் செத்தெம்பர் வரையான காலப்பகுதியில் ஒன்றுசேர்ந்த இறக்குமதிச் செலவினமானது கடந்த ஆண்டின் தொடர்புடைய காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 12,323 மில்லியனிற்கு 12.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

**நுகர்வுப் பொருட்கள்:** உணவு மற்றும் குடிபானங்கள் இறக்குமதிகள் வீழ்ச்சியொன்றினைப் பதிவுசெய்த போதிலும் உணவல்லா நுகர்வுப் பொருட்கள் மீதான செலவினத்தில் ஏற்பட்ட அதிகரிப்பின் காரணமாக

---

[2] இலங்கை மத்திய வங்கியின் இறக்குமதிகளின் வகைப்படுத்தல் மற்றும் நியம பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் திருத்தம் 4இன் அடிப்படையிலமைந்த இறக்குமதிகளின் வகைப்படுத்தல் என்பன முறையே இணைப்பு IV மற்றும் இணைப்பு V இல் காட்டப்பட்டுள்ளன.

நுகர்வுப் பொருட்களின் இறக்குமதி மீதான செலவினம் ஓராண்டிற்கு முன்னைய நிலையுடன் ஒப்பிடுகையில் 2023 செத்தெம்பரில் அதிகரித்தது. வீட்டுச் சாதனம் மற்றும் தளபாடப் பொருட்கள் (முதன்மையாக, புடவைப் பொருட்கள் மற்றும் சாப்பிடுவதற்கு உபயோகிக்கும் பொருட்டு மேசை மேல் வைக்கப்படும் பொருட்கள் மற்றும் சமையலறைப் பொருட்கள்), தொலைத்தொடர்பூட்டல் சாதனங்கள் (முதன்மையாக, தொலைபேசிகள்) மற்றும் புடவை மற்றும் துணைப் பொருட்கள் என்பவற்றின் இறக்குமதியில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்களவிலான அதிகரிப்புடன் உணவல்லா நுகர்வுப் பொருட்கள் மீதான செலவினத்தில் ஏற்பட்ட அதிகரிப்பானது பரந்த அடிப்படையிலானதாயமைந்தது. மாறாக, தானியங்கள் மற்றும் ஆலைக் கைத்தொழில் உற்பத்திகளின் (முக்கியமாக, அரிசி) தாழ்ந்தளவிலான இறக்குமதி அளவுகளின் காரணமாக உணவு மற்றும் குடிபானங்கள் மீதான செலவினம் 2023 செத்தெம்பரில் வீழ்ச்சியடைந்தது.

**இடைநிலைப் பொருட்கள்:** கோதுமை, எரிபொருள், வளமாக்கிகள் (முக்கியமாக, யூரியா) மற்றும் அடிப்படை உலோகங்கள் (முக்கியமாக, இரும்பு மற்றும் உருக்கு) என்பவற்றின் உயர்ந்தளவிலான இறக்குமதி அளவுகளினால் முக்கியமாக உந்தப்பட்டு இடைநிலைப் பொருட்களின் இறக்குமதி மீதான செலவினம் ஓராண்டிற்கு முன்னைய நிலையுடன் ஒப்பிடுகையில் 2023 செத்தெம்பரில் சிறிதளவு அதிகரித்தது. மசகெண்ணெய் இறக்குமதியின்மைக்கு மத்தியில், சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியத்தின் உயர்ந்தளவிலான இறக்குமதிகள் மற்றும் நிலக்கரி இறக்குமதிகளின் மீளாரம்பம் என்பவற்றுடன் எரிபொருள் மீதான செலவினம் 2022 செத்தெம்பருடன் ஒப்பிடுகையில் 2023 செத்தெம்பரில் அதிகரித்துக் காணப்பட்டது. இருப்பினும், ஏனையவற்றிற்கிடையில், புடவைகள் மற்றும் புடவைப் பொருட்கள் (முதன்மையாக, துணிகள்), பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள், இறப்பர் மற்றும் அதன் பொருட்கள், இரசாயன உற்பத்திகள் மற்றும் வைரங்கள் மற்றும் அருங்கற்கள் மற்றும் உலோகங்கள் என்பவற்றின் இறக்குமதிகள் 2022 செத்தெம்பருடன் ஒப்பிடுகையில் 2023 செத்தெம்பரில் வீழ்ச்சிகளைப் பதிவுசெய்தன.

**முதலீட்டுப் பொருட்கள்:** பொறி மற்றும் சாதனங்களின் (முதன்மையாக, பொறி மற்றும் சாதனப் பாகங்கள் மற்றும் பொறியியல் சாதனங்கள்) இறக்குமதிகளில் ஏற்பட்ட அதிகரிப்பினால் உந்தப்பட்டு முதலீட்டுப் பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் 2022 செத்தெம்பருடன் ஒப்பிடுகையில் 2023 செத்தெம்பரில் அதிகரித்தது. இரும்பு மற்றும் உருக்கு (முதன்மையாக, இரும்புக் கம்பிகள் மற்றும் தடிகள்) என்பவற்றின் உயர்ந்தளவிலான இறக்குமதிகளின் முக்கிய காரணமாக கட்டடவாக்கப் பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினமும் அதிகரித்த வேளையில், புகையிரதத் தடக் கட்டடவாக்கப் பொருட்களின் உயர்ந்தளவிலான இறக்குமதிகளின் முக்கிய காரணமாக போக்குவரத்துச் சாதனங்களின் இறக்குமதி மீதான செலவினம் அதிகரித்தது.

**வரைபடம் 5: மாதாந்த இறக்குமதிச் செயலாற்றம்**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 6: இறக்குமதிகளின் உள்ளடக்கம்**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

## வணிகப்பொருள் வர்த்தகச் சுட்டெண்கள்

இறக்குமதி விலைகளுக்கு ஏற்றுமதி விலைகளின் விகிதமாக விளங்குகின்ற வர்த்தக மாற்று விகிதமானது ஏற்றுமதி விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியானது இறக்குமதி விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியினை விஞ்சிக் காணப்பட்டமையினால் 2022 செத்தெம்பருடன் ஒப்பிடுகையில் 2023 செத்தெம்பரில் 5.1 சதவீதத்தினால் தேய்வடைந்து காணப்பட்டது.

**வரைபடம் 7: வர்த்தக மாற்று விகிதம்**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

2022 செத்தெம்பருடன் ஒப்பிடுகையில் 2023 செத்தெம்பரில் ஏற்றுமதி அளவுச் சுட்டெண் 10.7 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில், அலகுப் பெறுமதிச் சுட்டெண் 18.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமையானது, 2023 செத்தெம்பரில் ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட குறைவானது தாழ்ந்தளவிலான அலகு விலைகளின் விளைவொன்றென்பதனை முக்கியமாகச் சுட்டிக்காட்டியது.

**வரைபடம் 8: ஏற்றுமதி அளவு மற்றும் அலகுப் பெறுமதிச் சுட்டெண்கள்**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

2022 செத்தெம்பருடன் ஒப்பிடுகையில் 2023 செத்தெம்பரில் இறக்குமதி அளவுச் சுட்டெண் 22.7 சதவீதத்தினால் மேம்பட்ட வேளையில், அலகுப் பெறுமதிச் சுட்டெண் 14.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமையானது, 2023 செத்தெம்பரில் இறக்குமதிச் செலவினத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு உயர்ந்தளவிலான அளவுகளினால் முதன்மையாக உந்தப்பட்டமையினை எடுத்துக்காட்டியது.

**வரைபடம் 9: இறக்குமதி அளவு மற்றும் அலகுப் பெறுமதிச் சுட்டெண்கள்**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

## வெளிநாட்டு நடைமுறைக் கணக்கிற்கான ஏனைய முக்கிய அபிவிருத்திகள்

**தொழிலாளர் பணவனுப்பல்கள்:** தொழிலாளர் பணவனுப்பல்கள் 2022 செத்தெம்பரில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 359 மில்லியனுடனும் 2023 ஓகத்தில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 499 மில்லியனுடனும் ஒப்பிடுகையில் 2023 செத்தெம்பரில் ஐ.அ.டொலர் 482 மில்லியனாக விளங்கின. அதேவேளை, தற்காலிகத் தரவுகளின் அடிப்படையில், வெளிநாட்டுத் தொழில் வாய்ப்பிற்கான நாட்டிலிருந்தான மொத்தப் புறப்படுகைகள் 2022இல் பதிவுசெய்யப்பட்ட 311,056 எண்ணிக்கையிலான மொத்த புறப்படுகைகளுடன் ஒப்பிடுகையில் 2023 செத்தெம்பர் மற்றும் 2023 சனவரி தொடக்கம் செத்தெம்பர் வரையான காலப்பகுதியில் முறையே 25,648 மற்றும் 222,794ஆக விளங்கின.

**சுற்றுலாப் பயணிகள்:** சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 2023 ஓகத்தில் பதிவுசெய்யப்பட்ட 136,405 வருகைகளுடன் ஒப்பிடுகையில் 2023 செத்தெம்பரில் 111,938இற்கு வீழ்ச்சியடைந்தமையானது பருவகால போக்கினைப் பிரதிபலித்தது. இருப்பினும், ஒன்றுசேர்ந்த சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 2022இன் சனவரி தொடக்கம் செத்தெம்பர் வரையான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 526,232 வருகைகளுடன் ஒப்பிடுகையில் 2023இன் தொடர்புடைய காலப்பகுதியில் 1,016,256இற்கு குறிப்பிடத்தக்களவு மேம்பட்டன. சுற்றுலாத்துறையிலிருந்தான வருவாய்கள் முன்னைய மாதத்தில் பதிவுசெய்யப்பட்டிருந்த ஐ.அ.டொலர் 211 மில்லியனுடனும் 2022இன் செத்தெம்பர் மாதத்தில் பதிவுசெய்யப்பட்டிருந்த ஐ.அ.டொலர் 41 மில்லியனுடனும் ஒப்பிடுகையில் 2023இன் தொடர்புடைய மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 152 மில்லியனாக மதிப்பிடப்பட்டன. இதன் விளைவாக, 2022இன் சனவரி தொடக்கம் செத்தெம்பர் வரையான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 873 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2023இன் தொடர்புடைய காலப்பகுதியில் சுற்றுலாத்துறையிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 1,457 மில்லியனாக விளங்கின. 2023 செத்தெம்பர் மாத காலப்பகுதியில் சுற்றுலாப் பயணிகளின் வருகைகளின் முக்கிய மூல நாடுகளாக இந்தியா, சீனா, ஐக்கிய இராச்சியம், ஜேர்மனி மற்றும் ருஷியா என்பன காணப்பட்டன.

**வரைபடம் 10: மாதாந்த சுற்றுலாப் பயணிகள் வருகைகள்**




**மூலம்:** இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை

**வரைபடம் 11: சுற்றுலா மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்களிலிருந்தான வருவாய்கள்**




**மூலங்கள்:** இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை
உரிமம்பெற்ற வங்கிகள்
இலங்கை மத்திய வங்கி

## நிதியியல் பாய்ச்சல்கள்

அரச பிணையங்கள் சந்தையில் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு முதலீடுகள் 2023 ஓகத்தில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 37 மில்லியன் பெறுமதி கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலுடன் ஒப்பிடுகையில் 2023 செத்தெம்பரில் ஐ.அ.டொலர் 17 மில்லியன் பெறுமதி கொண்ட தாழ்ந்தளவிலான தேறிய வெளிப்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்தன. 2023 சனவரி தொடக்கம் செத்தெம்பர் வரையான காலப்பகுதியில் ஒன்றுசேர்ந்த தேறிய உட்பாய்ச்சலானது ஐ.அ.டொலர் 335 மில்லியனாக விளங்கியது. அதேவேளை, முதலாந்தர மற்றும் இரண்டாந்தர சந்தைக் கொடுக்கல்வாங்கல்கள் உள்ளடங்கலாக கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கான வெளிநாட்டு உட்பாய்ச்சல்கள் 2023 சனவரி தொடக்கம் செத்தெம்பர் வரையான காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 11 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்தன.

## பன்னாட்டு ஒதுக்குகள்

மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2023 செத்தெம்பர் இறுதியளவில் ஐ.அ.டொலர் 3.5 பில்லியனாக விளங்கின. இது பயன்படுத்தக்கூடிய தன்மை தொடர்பிலான நிபந்தனைகளுக்குட்பட்ட ஏறத்தாழ ஐ.அ.டொலர் 1.3 பில்லியனிற்கு நிகரான சீன மக்கள் வங்கியிடமிருந்தான பரஸ்பர பரிமாற்றல் வசதியினை உள்ளடக்கியுள்ளது. தேறிய அடிப்படையில் மாத காலப்பகுதியில் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையிலிருந்து ஐ.அ.டொலர் 83 மில்லியன் தொகையினை மத்திய வங்கி உள்ளீர்த்தது. ஒட்டுமொத்தமாக, 2023 சனவரி தொடக்கம் செத்தெம்பர் வரையான காலப்பகுதியில் தேறிய அடிப்படையொன்றில் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 1.6 பில்லியன் தொகையை மத்திய வங்கி கொள்வனவு செய்துள்ளது.

**வரைபடம் 12: மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் மற்றும் ஒதுக்குப் போதுமை**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

## வெளிநாட்டுச் செலாவணி வீத அசைவுகள்

**செலாவணி வீதமானது ஓரளவு தளம்பல்தன்மையினைக் காண்பித்ததுடன் 2023 செத்தெம்பர் மாத காலப்பகுதியில் பெறுமானத் தேய்வொன்றினைப் பதிவுசெய்தது.** 2023 ஒத்தோபர் 31 வரையான ஆண்டு காலப்பகுதியில், இலங்கை ரூபா ஐக்கிய அமெரிக்க டொலரிற்கெதிராக 10.9 சதவீதத்தினால் தொடர்ந்தும் உயர்வடைந்தது. அதேவேளை, குறுக்கு நாணய அசைவுகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில், 2023 ஒத்தோபர் 31 வரையான ஆண்டு காலப்பகுதியில் இலங்கை ரூபாவானது யூரோ, ஸ்ரேலிங் பவுன், யப்பானிய யென், இந்திய ரூபா மற்றும் அவுஸ்திரேலிய டொலர் என்பவற்றிற்கெதிராக உயர்வடைந்தது. இதன் விளைவாக, உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதமும் (REER 24) 2023 செத்தெம்பர் மாத காலப்பகுதியில் சிறிதளவு தேய்வடைந்த போதிலும் 100 சுட்டெண் புள்ளிகளின் மட்டத்திற்கு மிகவும் கீழாகத் தொடர்ந்தும் காணப்பட்டமையானது வெளிநாட்டுத்துறைப் போட்டித்தன்மையின் பேணுகையினைக் குறித்துக்காட்டுகின்றது.

**வரைபடம் 13: ஐக்கிய அமெரிக்க டொலரிற்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவு**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 14: உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீத (REER 24) அசைவு**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை 1: தெரிவுசெய்யப்பட்ட நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவு***

| நாணயம் | 2021 | 2022 | 2023 (ஒத் 31 வரை) |
|---|---|---|---|
| ஐ.அ.டொலர் | -7.0% | -44.8% | +10.9% |
| யூரோ | +1.1% | -41.4% | +11.5% |
| ஸ்ரேலிங் பவுன் | -6.0% | -38.1% | +10.0% |
| யப்பானிய யென் | +3.8% | -36.4% | +25.1% |
| அவுஸ்திரேலிய டொலர் | -1.2% | -40.8% | +17.9% |
| இந்திய ரூபா | -5.5% | -38.6% | +11.5% |

*தேய்வு (-)/உயர்வு (+)

**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

**2023 ஒத்தோபரிற்கான வெளிநாட்டுத்துறைப் பத்திரிகை வெளியீடு 2023 நவெம்பர் 30 அன்று வெளியிடப்படும்.**

**இணைப்பு I:**

**வெளிநாட்டுத்துறைச் செயலாற்றத்தின் சுருக்கம் (அ)**

| வகை | செத் 2022 (ஐ.அ.டொ. மில்) | செத் 2023 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) | சன-செத் 2022 (ஐ.அ.டொ. மில்) | சன-செத் 2023 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| வணிகப்பொருள் ஏற்றுமதிகள் | 1,080 | 972 | -10.0 | 9,992 | 8,982 | -10.1 |
| வணிகப்பொருள் இறக்குமதிகள் | 1,284 | 1,349 | 5.1 | 14,085 | 12,323 | -12.5 |
| வர்த்தக மீதி | -205 | -378 | | -4,093 | -3,342 | |
| சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் | 41 (ஆ) | 152 (இ) | 275.7 | 873 (ஆ) | 1,457 (இ) | 66.8 |
| தொழிலாளர் பணவனுப்பல்கள் | 359 | 482 | 34.2 | 2,574 | 4,345 | 68.8 |
| கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கான உட்பாய்ச்சல்கள் (தேறிய) (ஈ) | 41 | -5 | | 138 | 11 | |
| அரச பிணையங்கள் சந்தையிற்கான மொத்த உட்பாய்ச்சல்கள் | 39 | 52 | | 54 | 709 | |
| திரண்ட நிலுவை | | | | -2,927 | 1,863 | |

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை, கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை, இலங்கை முதலீட்டுச் சபை, இலங்கை மத்திய வங்கி

(அ) தற்காலிகமானது

(ஆ) இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் அளவீட்டுப் பெறுபேறுகளின் அடிப்படையில் 2022இல் திருத்தப்பட்டது

(இ) இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் அளவீட்டுப் பெறுபேறுகளின் அடிப்படையில் 2023இல் திருத்தப்பட்டது

(ஈ) முதலாந்தர மற்றும் இரண்டாந்தரக் கொடுக்கல்வாங்கல்களை உள்ளடக்குகின்றது

**இலங்கை மத்திய வங்கி, வணிகப்பொருள் வர்த்தகச் செயலாற்றம் தொடர்பான மேலதிகத் தகவல்களைக் கொண்ட "மாதாந்த வர்த்தக செய்தித்திரட்டு" ஒன்றினை வெளியிட்டு வருகிறது. இதனை புள்ளிவிபரங்கள் > பொருளாதாரக் குறிகாட்டிகள் > மாதாந்த வர்த்தகச் செய்தித்திரட்டு இன் கீழ், இலங்கை மத்திய வங்கியின் வெப்தளத்தில் பார்வையிடமுடியும்.**
**https://www.cbsl.gov.lk/ta/node/6181**

**இணைப்பு II:**

**இலங்கை மத்திய வங்கியினால் வகைப்படுத்தப்பட்ட ஏற்றுமதி வருவாய்கள் (அ)**

| வகை | செத் 2022 (ஐ.அ.டொ. மில்) | செத் 2023 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) | சன-செத் 2022 (ஐ.அ.டொ. மில்) | சன-செத் 2023 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **843.7** | **724.3** | **-14.2** | **8,011.5** | **6,997.9** | **-12.7** |
| உணவு, குடிபானம் மற்றும் புகையிலை | 39.8 | 43.2 | 8.6 | 405.8 | 397.7 | -2.0 |
| விலங்குத்தீன் | 9.5 | 8.9 | -6.8 | 118.8 | 111.0 | -6.5 |
| புடவைகள் மற்றும் ஆடைகள் | 481.5 | 363.0 | -24.6 | 4,577.2 | 3,688.7 | -19.4 |
| இதில் ஆடைகள் | 442.8 | 325.2 | -26.6 | 4,215.9 | 3,345.5 | -20.6 |
| புடவைகள் | 29.6 | 29.2 | -1.3 | 270.5 | 266.8 | -1.4 |
| ஏனைய தயாரிக்கப்பட்ட புடவைப் பொருட்கள் | 9.2 | 8.6 | -6.3 | 90.7 | 76.4 | -15.8 |
| இறப்பர் உற்பத்திகள் | 78.9 | 80.6 | 2.2 | 755.1 | 668.6 | -11.5 |
| இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் | 47.9 | 41.3 | -13.9 | 336.5 | 394.3 | 17.1 |
| பொறி மற்றும் இயந்திரவியல் சாதனங்கள் | 52.0 | 46.9 | -9.9 | 427.9 | 465.5 | 8.8 |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 9.2 | 6.3 | -30.9 | 98.6 | 124.6 | 26.4 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 30.0 | 45.7 | 52.3 | 439.9 | 371.4 | -15.6 |
| இரசாயன உற்பத்திகள் | 20.6 | 16.2 | -21.6 | 171.4 | 142.6 | -16.8 |
| மரம் மற்றும் தாள் உற்பத்திகள் | 11.5 | 10.7 | -7.1 | 107.3 | 87.1 | -18.8 |
| அச்சிடல் கைத்தொழில் பொருட்கள் | 1.5 | 2.0 | 32.7 | 39.4 | 44.6 | 13.1 |
| தோல், பயணப் பொருட்கள் மற்றும் காலணி | 9.4 | 7.3 | -21.9 | 63.6 | 55.1 | -13.4 |
| பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள் | 5.5 | 4.7 | -15.6 | 48.8 | 42.1 | -13.6 |
| அடிப்படை உலோகங்கள் மற்றும் பொருட்கள் | 14.4 | 18.2 | 26.5 | 134.6 | 133.8 | -0.6 |
| மட்பாண்ட உற்பத்திகள் | 3.7 | 2.9 | -23.5 | 29.7 | 25.7 | -13.4 |
| ஏனைய கைத்தொழில் ஏற்றுமதிகள் | 28.2 | 26.5 | -6.0 | 256.9 | 245.2 | -4.6 |
| **2. வேளாண்மை ஏற்றுமதிகள்** | **231.2** | **242.5** | **4.9** | **1,939.8** | **1,945.4** | **0.3** |
| தேயிலை | 117.8 | 120.0 | 1.8 | 937.1 | 990.3 | 5.7 |
| இறப்பர் | 3.3 | 2.3 | -30.0 | 32.7 | 23.5 | -28.2 |
| தேங்காய் | 29.7 | 32.4 | 9.2 | 314.0 | 256.4 | -18.3 |
| வாசனைத்திரவியங்கள் | 40.6 | 37.8 | -6.7 | 274.1 | 298.5 | 8.9 |
| காய்கறிகள் | 2.3 | 2.5 | 10.8 | 19.8 | 20.5 | 3.2 |
| தயாரிக்கப்படாத புகையிலை | 2.1 | 1.6 | -22.8 | 17.8 | 19.8 | 11.4 |
| சிறு வேளாண்மை உற்பத்திகள் | 18.6 | 20.2 | 8.8 | 138.9 | 143.5 | 3.3 |
| கடலுணவு | 17.0 | 25.7 | 51.3 | 205.3 | 193.0 | -6.0 |
| **3. கனிம ஏற்றுமதிகள்** | **3.0** | **2.3** | **-24.5** | **24.1** | **18.0** | **-25.6** |
| **4. வகைப்படுத்தப்படாத ஏற்றுமதிகள்** | **1.8** | **2.6** | **43.7** | **16.6** | **20.5** | **23.7** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **1,079.8** | **971.7** | **-10.0** | **9,992.0** | **8,981.8** | **-10.1** |

(அ) தற்காலிகமானவை

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள், இலங்கை மத்திய வங்கி

## இணைப்பு III:

### நியம பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் திருத்தம் 4 இன்படி வகைப்படுத்தப்பட்ட ஏற்றுமதி வருவாய்கள் (அ)

| வகை | செத் 2022 (ஐ.அ.டொ. மில்) | செத் 2023 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) | சன-செத் 2022 (ஐ.அ.டொ. மில்) | சன-செத் 2023 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **0. உணவு மற்றும் உயிருடனான விலங்குகள்** | **238.1** | **253.0** | **6.3** | **2,024.6** | **2,076.9** | **2.6** |
| 03 மீன் மற்றும் மீன் தயாரிப்புக்கள் | 18.7 | 28.8 | 53.8 | 229.7 | 221.0 | -3.8 |
| 04 தானியங்கள் மற்றும் தானியத் தயாரிப்புக்கள் | 6.9 | 7.6 | 10.8 | 57.6 | 57.8 | 0.3 |
| 05 காய்கறிகள் மற்றும் பழவர்க்கங்கள் | 38.6 | 43.7 | 13.0 | 350.7 | 320.5 | -8.6 |
| 07 கோப்பி, தேயிலை, கொக்கோ, வாசனைத்திரவியங்கள் மற்றும் அவற்றின் தயாரிப்புக்கள் | 156.5 | 158.2 | 1.1 | 1,196.2 | 1,286.8 | 7.6 |
| **1. குடிபானங்கள் மற்றும் புகையிலை** | **11.0** | **12.3** | **11.8** | **104.5** | **116.8** | **11.8** |
| 11 குடிபானங்கள் | 4.0 | 5.6 | 38.7 | 37.3 | 48.5 | 30.2 |
| 12 புகையிலை மற்றும் புகையிலைத் தயாரிப்புக்கள் | 7.0 | 6.7 | -3.7 | 67.2 | 68.3 | 1.7 |
| **2. மசகுப் பொருட்கள், எரிபொருள் தவிர்ந்த சமையலுக்குப் பயன்படுத்தப்படாதவை** | **33.9** | **33.2** | **-2.0** | **337.7** | **292.8** | **-13.3** |
| 23 மசகு இறப்பர் | 3.4 | 2.5 | -27.2 | 33.6 | 24.5 | -27.0 |
| 26 புடவை துணிகள் மற்றும் அவற்றின் கழிவுகள் | 16.2 | 19.4 | 19.3 | 178.7 | 171.3 | -4.1 |
| **3. கனிப் பொருள் எரிபொருட்கள், உராய்வு நீக்கிகள் மற்றும் தொடர்பான பொருட்கள்** | **30.0** | **45.7** | **52.3** | **439.9** | **371.4** | **-15.6** |
| 33 பெற்றோலியம், பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் தொடர்பான பொருட்கள் | 30.0 | 45.7 | 52.3 | 424.0 | 371.4 | -12.4 |
| 34 வாயு, இயற்கை மற்றும் தயாரிக்கப்பட்டவை | - | - | - | 15.9 | - | - |
| **4. விலங்கு மற்றும் காய்கறி எண்ணெய், கொழுப்பு மற்றும் மெழுகு** | **5.4** | **7.3** | **33.3** | **74.3** | **51.6** | **-30.6** |
| 42 நிர்ணயிக்கப்பட்ட காய்கறி கொழுப்பு மற்றும் எண்ணெய், மசகு, சுத்திகரிக்கப்பட்ட அல்லது பின்னப்படுத்தப்பட்டவை | 5.4 | 7.0 | 29.9 | 61.0 | 49.9 | -18.1 |
| **5. இரசாயனங்கள் மற்றும் தொடர்பான உற்பத்திகள் வே.எ.கு** | **25.6** | **18.9** | **-26.3** | **210.1** | **173.9** | **-17.2** |
| **6. தயாரிக்கப்பட்ட பொருட்களின் வகைப்படி முக்கியமாக வகைப்படுத்தப்பட்டவை** | **164.4** | **166.2** | **1.1** | **1,434.3** | **1,431.1** | **-0.2** |
| 62 இறப்பர் தயாரிப்புக்கள் வே.எ.கு | 55.3 | 61.7 | 11.6 | 527.2 | 500.3 | -5.1 |
| 65 புடவை நூலிழை, துணிகள், தயாரிக்கப்பட்ட பொருட்கள் போன்றவை வே.எ.கு | 37.2 | 33.8 | -9.2 | 345.2 | 308.0 | -10.8 |
| 66 உலோகமல்லா கனிப்பொருள் தயாரிப்புக்கள் வே.எ.கு | 52.5 | 46.6 | -11.3 | 380.8 | 440.8 | 15.8 |
| **7. பொறிகள், போக்குவரத்துக் கருவிகள்** | **59.6** | **52.1** | **-12.6** | **512.4** | **576.6** | **12.5** |
| 77 மின்னியல் பொறிகள், துணைப் பொருட்கள் மற்றும் சாதனங்கள் வே.எ.கு மற்றும் மின்னியல் உதிரிப்பாகங்கள் | 32.7 | 26.7 | -18.4 | 269.0 | 276.3 | 2.7 |
| **8. பல்வகைத் தயாரிப்புப் பொருட்கள்** | **511.7** | **383.0** | **-25.1** | **4,853.5** | **3,890.5** | **-19.8** |
| 84 ஆடைப் பொருட்கள் மற்றும் துணிகளுடன் இணைந்த பொருட்கள் | 472.3 | 348.9 | -26.1 | 4,480.0 | 3,547.3 | -20.8 |
| **9. பண்டங்கள் மற்றும் இப்புள்ளிவிபரத்தில் வேறு எங்கும் வகைப்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கல்** | **0.03** | **-** | **-** | **0.8** | **0.3** | **-61.4** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **1,079.8** | **971.7** | **-10.0** | **9,992.0** | **8,981.8** | **-10.1** |

(அ) தற்காலிகமானது
வே.எ.கு வேறு எங்கும் குறிப்பிடப்படாதவை

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள், இலங்கை மத்திய வங்கி

குறிப்பு: முதலாவது இலக்கம் பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமத்தின் ‘பகுதியினையும்’ முதலாவது மற்றும் இரண்டாவது இலக்கங்கள் அதன் ‘பிரிவினையும்’ எடுத்துக்காட்டுகின்றன. மேற்குறிப்பிட்ட அட்டவணை பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமத்தின் தெரிவுசெய்யப்பட்ட பிரிவுகளை மாத்திரம் காட்டுகிறது. பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமம் தொடர்பான மேலதிகத் தகவல்களுக்கு இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை 2017இன் சிறப்புக் குறிப்பு 4இனை தயவுசெய்து பார்க்கவும்.
https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/publications/annual_report/2017/ta/9_Chapter_05.pdf

**இணைப்பு IV:**

**இலங்கை மத்திய வங்கியினால் வகைப்படுத்தப்பட்ட இறக்குமதிகள் மீதான செலவினம் (அ)**

| வகை | செத் 2022 (ஐ.அ.டொ. மில்) | செத் 2023 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) | சன-செத் 2022 (ஐ.அ.டொ. மில்) | சன-செத் 2023 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. நுகர்வுப் பொருட்கள்** | **201.1** | **214.2** | **6.5** | **2,146.7** | **2,242.5** | **4.5** |
| உணவு மற்றும் குடிவகைகள் | 121.5 | 108.6 | -10.7 | 1,227.7 | 1,266.6 | 3.2 |
| தானியங்கள் மற்றும் ஆலையிடும் கைத்தொழில் உற்பத்திகள் | 30.0 | 4.6 | -84.7 | 315.4 | 95.2 | -69.8 |
| பால் உற்பத்திகள் | 9.5 | 15.0 | 57.6 | 184.1 | 221.4 | 20.3 |
| காய்கறிகள் (ஆ) | 23.5 | 23.9 | 1.7 | 249.7 | 271.3 | 8.6 |
| கடலுணவு | 3.7 | 6.6 | 77.9 | 53.0 | 49.9 | -5.9 |
| சீனி மற்றும் சிற்றூண்டிகள் | 31.8 | 26.5 | -16.8 | 180.6 | 315.9 | 74.9 |
| வாசனைத்திரவியங்கள் | 11.7 | 9.5 | -19.0 | 104.9 | 95.9 | -8.6 |
| ஏனைய உணவு மற்றும் குடிபானங்கள் | 11.3 | 22.5 | 99.4 | 140.0 | 217.0 | 55.0 |
| உணவல்லா நுகர்வுப் பொருட்கள் | 79.6 | 105.7 | 32.8 | 919.0 | 976.0 | 6.2 |
| தனியாள் ஊர்திகள் | 0.7 | 2.4 | 226.1 | 6.5 | 19.9 | 208.8 |
| மருந்து மற்றும் மருந்தாக்கல் பொருட்கள் | 44.5 | 45.2 | 1.5 | 392.0 | 511.4 | 30.5 |
| வீட்டுச்சாதனப் பொருட்கள் | 4.1 | 6.9 | 66.4 | 75.4 | 43.9 | -41.8 |
| புடவை மற்றும் துணைப்பொருட்கள் | 11.3 | 15.4 | 35.4 | 169.9 | 124.0 | -27.0 |
| தொலைத்தொடர்பூட்டல் சாதனங்கள் | 4.1 | 8.5 | 106.2 | 54.0 | 60.9 | 12.8 |
| வீட்டுச் சாதனம் மற்றும் தளபாடங்கள் | 5.6 | 11.6 | 105.4 | 92.5 | 81.1 | -12.3 |
| ஏனைய உணவல்லா நுகரக்கூடியவைகள் | 9.1 | 15.8 | 73.9 | 128.7 | 134.8 | 4.7 |
| **2. இடைநிலைப் பொருட்கள்** | **913.4** | **919.8** | **0.7** | **9,497.4** | **8,105.3** | **-14.7** |
| எரிபொருள் | 376.4 | 396.7 | 5.4 | 3,694.3 | 3,476.3 | -5.9 |
| இதில் மசகெண்ணெய் | 85.6 | - | - | 342.9 | 797.2 | 132.5 |
| சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் | 290.0 | 363.0 | 25.2 | 3,086.0 | 2,304.2 | -25.3 |
| நிலக்கரி | 0.8 | 33.8 | 4,149.4 | 265.4 | 374.9 | 41.2 |
| வைரங்கள் மற்றும் அருங்கற்கள், உலோகங்கள் | 23.6 | 15.4 | -34.6 | 157.2 | 194.6 | 23.8 |
| புடவைகள் மற்றும் புடவைப்பொருட்கள் | 231.5 | 176.6 | -23.7 | 2,407.2 | 1,760.6 | -26.9 |
| தாள் மற்றும் அட்டை மற்றும் அதன் பொருட்கள் | 35.1 | 27.7 | -21.2 | 360.6 | 298.8 | -17.1 |
| வேளாண்மை உள்ளீடுகள் | 13.4 | 15.9 | 18.6 | 161.7 | 182.1 | 12.6 |
| கோதுமை மற்றும் சோளம் | 18.2 | 62.2 | 240.6 | 188.5 | 264.0 | 40.1 |
| அடிப்படை உலோகங்கள் | 12.7 | 26.9 | 111.5 | 282.7 | 235.9 | -16.6 |
| பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள் | 49.4 | 39.5 | -20.0 | 514.3 | 335.9 | -34.7 |
| இரசாயன உற்பத்திகள் | 74.1 | 65.7 | -11.3 | 756.2 | 593.3 | -21.5 |
| வளமாக்கி | 6.3 | 22.0 | 249.7 | 104.5 | 161.8 | 54.8 |
| இறப்பர் மற்றும் அதன் பொருட்கள் | 26.6 | 17.0 | -36.3 | 284.2 | 137.2 | -51.7 |
| கனிம உற்பத்திகள் | 4.4 | 8.2 | 87.7 | 106.8 | 54.3 | -49.2 |
| ஏனைய இடைநிலைப் பொருட்கள் | 41.5 | 45.9 | 10.6 | 479.1 | 410.5 | -14.3 |
| **3. முதலீட்டுப் பொருட்கள்** | **169.5** | **215.0** | **26.8** | **2,433.0** | **1,963.0** | **-19.3** |
| பொறி மற்றும் கருவிகள் | 108.3 | 136.7 | 26.2 | 1,570.7 | 1,355.7 | -13.7 |
| கட்டடப் பொருட்கள் | 57.9 | 66.0 | 14.0 | 747.1 | 547.4 | -26.7 |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 3.3 | 12.0 | 261.4 | 112.5 | 57.6 | -48.8 |
| ஏனைய முதலீட்டுப்பொருட்கள் | 0.05 | 0.3 | 641.5 | 2.7 | 2.3 | -16.9 |
| **4. வகைப்படுத்தப்படாத இறக்குமதிகள்** | **0.3** | **0.2** | **-29.2** | **8.1** | **12.6** | **56.2** |
| **மொத்த இறக்குமதிகள்** | **1,284.4** | **1,349.3** | **5.1** | **14,085.2** | **12,323.4** | **-12.5** |
| **எரிபொருள் அல்லாத இறக்குமதிகள்** | **907.9** | **952.5** | **4.9** | **10,390.9** | **8,847.1** | **-14.9** |

(அ) தற்காலிகமானவை
(ஆ) பருப்பு வகை, வெங்காயம், உருளைக்கிழங்கு, அவரை வகை மற்றும் பிற காய்கறிகளை உள்ளடக்குகின்றது

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், லங்கா ஐஓசி பிஎல்சி, இலங்கை மத்திய வங்கி

## இணைப்பு V:

### நியம பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் திருத்தம் 4 இன்படி வகைப்படுத்தப்பட்ட இறக்குமதிச் செலவினம் (அ)

| வகை | செத் 2022 (ஐ.அ.டொ. மில்) | செத் 2023 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) | சன-செத் 2022 (ஐ.அ.டொ. மில்) | சன-செத் 2023 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **0. உணவு மற்றும் உயிருடனான விலங்குகள்** | **155.4** | **181.9** | **17.1** | **1,602.0** | **1,649.1** | **2.9** |
| 02 பாற்பண்ணை உற்பத்திகள் மற்றும் பறவைகளின் முட்டைகள் | 9.5 | 16.5 | 73.6 | 184.4 | 230.5 | 25.0 |
| 03 மீன் மற்றும் மீன் தயாரிப்புக்கள் | 3.8 | 6.7 | 74.8 | 54.0 | 50.7 | -6.2 |
| 04 தானியங்கள் மற்றும் தானியத் தயாரிப்புக்கள் | 47.8 | 66.4 | 38.9 | 500.0 | 358.1 | -28.4 |
| 05 காய்கறிகள் மற்றும் பழவர்க்கங்கள் | 26.2 | 26.9 | 2.8 | 286.2 | 301.1 | 5.2 |
| 06 சீனி, சீனித் தயாரிப்புகள் மற்றும் தேன் | 31.8 | 26.5 | -16.8 | 180.6 | 315.9 | 74.9 |
| 07 கோப்பி, தேயிலை, கொக்கோ, வாசனைத்திரவியங்கள் மற்றும் அவற்றின் தயாரிப்புக்கள் | 14.5 | 14.1 | -2.8 | 136.6 | 129.7 | -5.1 |
| **1. குடிபானங்கள் மற்றும் புகையிலை** | **10.7** | **11.2** | **5.1** | **76.0** | **89.2** | **17.4** |
| **2. மசகுப் பொருட்கள், எரிபொருள் தவிர்ந்த சமையலுக்குப் பயன்படுத்தப்படாதவை** | **34.8** | **28.5** | **-18.3** | **381.8** | **238.9** | **-37.4** |
| 23 மசகு இறப்பர் | 22.6 | 13.4 | -40.7 | 242.6 | 104.6 | -56.9 |
| 26 புடவை துணிகள் மற்றும் அவற்றின் கழிவுகள் | 2.6 | 2.1 | -20.8 | 21.5 | 31.2 | 44.7 |
| **3. கனிப் பொருள் எரிபொருட்கள், உராய்வு நீக்கிகள் மற்றும் தொடர்பான பொருட்கள்** | **376.4** | **396.7** | **5.4** | **3,694.3** | **3,476.3** | **-5.9** |
| 33 பெற்றோலியம், பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் தொடர்பான பொருட்கள் | 351.4 | 330.6 | -5.9 | 3,244.3 | 2,888.8 | -11.0 |
| 34 வாயு, இயற்கை மற்றும் தயாரிக்கப்பட்டவை | 24.2 | 32.3 | 33.6 | 184.7 | 212.7 | 15.2 |
| **4. விலங்கு மற்றும் காய்கறி எண்ணெய், கொழுப்பு மற்றும் மெழுகு** | **3.2** | **9.1** | **186.6** | **65.2** | **124.8** | **91.3** |
| 42 நிர்ணயிக்கப்பட்ட காய்கறி கொழுப்பு மற்றும் எண்ணெய், மசகு, சுத்திகரிக்கப்பட்ட அல்லது பின்னப்படுத்தப்பட்டவை | 2.4 | 8.2 | 249.4 | 53.4 | 116.8 | 118.8 |
| **5. இரசாயனங்கள் மற்றும் தொடர்பான உற்பத்திகள் வே.எ.கு** | **171.8** | **168.1** | **-2.1** | **1,742.8** | **1,570.9** | **-9.9** |
| 54 மருந்து மற்றும் மருந்தாக்கல் உற்பத்திகள் | 43.1 | 40.6 | -5.9 | 369.4 | 475.2 | 28.7 |
| 56 வளமாக்கி மற்றும் தயாரிக்கப்பட்டவை | 6.3 | 22.0 | 250.5 | 104.3 | 161.6 | 54.8 |
| 57 ஆரம்ப வடிவத்தில் பிளாத்திக்குகள் | 29.8 | 26.5 | -10.9 | 351.5 | 214.8 | -38.9 |
| 58 ஆரம்ப வடிவத்தில் அல்லாத பிளாத்திக்குகள் | 16.5 | 9.6 | -41.8 | 133.9 | 97.2 | -27.4 |
| **6. தயாரிக்கப்பட்ட பொருட்களின் வகைப்படி முக்கியமாக வகைப்படுத்தப்பட்டவை** | **359.3** | **332.3** | **-7.5** | **4,066.5** | **3,110.0** | **-23.5** |
| 64 தாள், தாள் அட்டைகள் மற்றும் அவற்றின் பொருட்கள் | 32.0 | 25.6 | -20.2 | 337.4 | 289.0 | -14.3 |
| 65 புடவை நூழிலை, துணிகள், தயாரிக்கப்பட்ட பொருட்கள் போன்றவை வே.எ.கு | 223.5 | 171.8 | -23.1 | 2,355.1 | 1,703.6 | -27.7 |
| 66 உலோகமல்லா கனிப்பொருள் தயாரிப்புக்கள் வே.எ.கு | 39.8 | 33.3 | -16.2 | 392.3 | 350.2 | -10.7 |
| 67 இரும்பு மற்றும் உருக்கு | 17.5 | 45.2 | 158.7 | 392.3 | 318.4 | -18.8 |
| **7. பொறிகள், போக்குவரத்துக் கருவிகள்** | **119.3** | **156.0** | **30.8** | **1,833.1** | **1,521.8** | **-17.0** |
| 72 குறிப்பிட்ட கைத்தொழில்களுக்கான சிறப்பியல்புவாய்ந்த பொறி | 17.6 | 19.7 | 11.8 | 324.5 | 187.0 | -42.4 |
| 74 பொதுவான கைத்தொழில்களுக்கான பொறி மற்றும் கருவிகள் வே.எ.கு பொறி உதிரிப்பாகங்கள் | 20.5 | 26.4 | 28.6 | 353.5 | 256.1 | -27.5 |
| 75 அலுவலக எந்திரங்கள் மற்றும் தன்னியக்க தரவு செயன்முறைப்படுத்தல் எந்திரங்கள் | 9.9 | 10.8 | 9.6 | 133.5 | 101.2 | -24.2 |
| 76 தொலைத்தொடர்பூட்டல் மற்றும் ஒலிப் பதிவுகள் மற்றும் மீள் தயாரிப்பு பொறிகள் மற்றும் கருவிகள் | 12.0 | 22.5 | 87.7 | 182.6 | 172.9 | -5.3 |
| 77 மின்னியல் பொறிகள், துணைப் பொருட்கள் மற்றும் சாதனங்கள் வே.எ.கு மற்றும் மின்னியல் உதிரிப்பாகங்கள் | 44.8 | 48.5 | 8.5 | 504.8 | 410.9 | -18.6 |
| 78 வீதி ஊர்திகளி | 6.1 | 10.1 | 65.7 | 127.5 | 101.7 | -20.2 |
| **8. பல்வகைத் தயாரிப்புப் பொருட்கள்** | **53.0** | **65.2** | **23.1** | **613.8** | **532.0** | **-13.3** |
| 84 ஆடைப் பொருட்கள் மற்றும் துணிகளுடன் இணைந்த பொருட்கள் | 11.6 | 12.4 | 7.4 | 150.5 | 107.8 | -28.4 |
| 87 தொழில்சார், விஞ்ஞான மற்றும் கட்டுப்பாட்டுச் சாதனங்கள் மற்றும் வே.எ.கு கருவிகள் | 8.5 | 15.9 | 88.7 | 111.6 | 114.9 | 3.0 |
| **9. பண்டங்கள் மற்றும் இப்புள்ளிவிபரத்தில் வேறு எங்கும் வகைப்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கல்** | **0.5** | **0.3** | **-42.3** | **9.6** | **10.5** | **8.9** |
| **மொத்த இறக்குமதிகள்** | **1,284.4** | **1,349.3** | **5.1** | **14,085.1** | **12,323.4** | **-12.5** |

(அ) தற்காலிகமானது

வே.எ.கு வேறு எங்கும் குறிப்பிடப்படாதவை

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், லங்கா ஐஓசி பிஎல்சி, இலங்கை மத்திய வங்கி

குறிப்பு: முதலாவது இலக்கம் பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமத்தின் ‘பகுதியினையும்’ முதலாவது மற்றும் இரண்டாவது இலக்கங்கள் அதன் ‘பிரிவினையும்’ எடுத்துக்காட்டுகின்றன. மேற்குறிப்பிட்ட அட்டவணை பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமத்தின் தெரிவுசெய்யப்பட்ட பிரிவுகளை மாத்திரம் காட்டுகிறது. பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமம் தொடர்பான மேலதிகத் தகவல்களுக்கு இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை 2017இன் சிறப்புக் குறிப்பு 4இனை தயவுசெய்து பார்க்கவும். https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/publications/annual_report/2017/ta/9_Chapter_05.pdf